ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2023/47 - 2017 ජුනි මස 15 වැනි බ්‍රහස්පතින්දා - 2017.06.15

*2023/47 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு யூன் மாதம் 15 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**தேசிய அரச பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க,**
**நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டம்**

*15(1) ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*தேசிய அரச பேரவையின் 1978 ஆம் ஆண்டு நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்ட இல. 41 இன் பிரிவு 15(1) இன்கீழ் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு, பெருநகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சராகிய பாட்டலீ சம்பிக்க ரணவக்க ஆகிய நான், தெஹிவளை-கல்கிஸ்ஸை மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ளதும், கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டதுமான காணிகளானது இன்றிலிருந்து நகர அபிவிருத்தி அதிகார சபைக்குரித்தானது என இக்கட்டளை மூலம் உடைமையாக்குகின்றேன்.*

*பாட்டலீ சம்பிக்க ரணவக்க (பா. உ.),*
*பெருநகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர்.*

*பெருநகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு,*
*17 மற்றும் 18 ஆம் மாடிகள்,*
*"சுஹூறுபாய",*
*பத்தரமுல்லை,*
*2017, யூன் 12.*

### அட்டவணை

*மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், தெஹிவளை-கல்கிஸ்ஸை மாநகர சபை எல்லைக்குட்பட்டதும், தெஹிவளை பிரதேச செயலகப் பிரிவினுள் தெஹிவளை கிராமத்தில் அமைந்துள்ளதுமான காணியானது, மாநகர சபையின் நிலஅளவையாளரினால் 1975.12.11 இல் தயாரிக்கப்பட்டு மாதிரிப்பட இல. 55 இனை உடைய 1, 2, 3, 4 மற்றும் 5 என ஐந்து (05) காணித்துண்டுகளைக் கொண்டுள்ளது. வடக்கே புகையிரத வீதியையும், கிழக்கே மதிப்பீட்டு இல. 21, புகையிரத வீதியையும், தெற்கே மதிப்பீட்டு இல. 22/4 மற்றும் காலி வீதியையும், மேற்கே மதிப்பீட்டு இல. 27 மற்றும் 27/1 மற்றும் புகையிரத வீதியையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. அக்காணியானது 0ஏ. 1றூ. 10.90பேர்ச். விஸ்தீரணத்தையும் கொண்டுள்ளது.*

*06-1104*

1A – G 25726 – 08 (2017/06) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.
*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*